மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்

(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)

முன்னிலை - **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**

தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி) கும்பகோணம்,

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் தேதி சனிக்கிழமை

**Common Order in**

**எம்.சி.ஓ.பி. எண். 164/2019 & 77/2019**

**எம்.சி.ஓ.பி. எண். 164/2019**

கணேசன், த/பெ. சுப்பிரமணியன், கருப்பசாமி கோவில் தெரு,

புளியம்பேட்டை மெயின்ரோடு, திருவிடைமருதூர் தாலுக்கா.

.....மனுதாரர்

-எதிர்-

1) பிரகாஷ், த/பெ. சின்னப்பிள்ளை, கருப்பசாமி கோவில் தெரு,

புளியம்பேட்டை மெயின்ரோடு, திருவிடைமருதூர் தாலுக்கா.

2) கிளை மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்.,

க.எண். 42, மடத்து தெரு, கும்பகோணம்.

.....எதிர்மனுதாரர்கள்

**எம்.சி.ஓ.பி. எண். 77/2019**

தர்மேந்திரன், த/பெ. சின்னப்பிள்ளை, க.எண். 115, கருப்பசாமி கோவில் தெரு,

புளியம்பேட்டை மெயின்ரோடு, திருவிடைமருதூர் தாலுக்கா.

.....மனுதாரர்

-எதிர்-

1) பிரகாஷ், த/பெ. சின்னப்பிள்ளை, க.எண். 115, கருப்பசாமி கோவில் தெரு,

புளியம்பேட்டை மெயின்ரோடு, திருவிடைமருதூர் தாலுக்கா.

2) கிளை மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்.,

க.எண். 42, மடத்து தெரு, கும்பகோணம்.

.....எதிர்மனுதாரர்கள்

மேற்படி மனுக்களில் காயமுற்றவர்களுக்காக ஒரே குற்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், ஒரே விபத்தில் காயம்பட்டவர்கள் என்பதாலும், இருவழக்குகளையும் கூட்டாக விசாரிக்க அனுமதி கோரி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மனுக்கள் இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.மு.க. ராஜசேகர் அவர்கள் ஆஜராகியும், 1ஆம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியும் ஆஜரராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B. தங்கதுரை அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## <u>பொதுவான உத்தரவு</u>

**2) <u>எம்.சி.ஓ.பி. எண். 164/2019</u>**

மனுதாரருக்கு 27.08.2018 அன்று நடந்த விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.5,00,000/- வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 140, 141, 163, 166 உ/இ 3(1) ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>மனுவின் சுருக்கம்</u>**:

மனுதாரர் கடந்த 27.08.2018 அன்று மதியம் சுமார் 2.45 மணியளவில் மனுதாரர் அவரது தெருவை சேர்ந்த தினேஷ்குமார், தர்மேந்திரன், தர்மசீலன் ஆகியோர் செப்டிக் டேங்க் மூடும் கருங்கல் ஸ்லாப்புகளை 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-X-7502 என்ற பதிவெண் கொண்ட Mahindra Supro Mini Truck ல் ஏற்றி கொண்டு நாச்சியார்கோவிலுக்கு செல்லும் போது மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் பாஸ்கர்

வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் வண்டி நிலை தடுமாறி ரோட்டின் இடதுபுறமாக சாய்ந்ததால் வண்டியின் பின்னால் அமர்ந்திருந்த மனுதாரருக்கும், தினேஷ்குமார், தர்மேந்திரன், தர்மசீலன் ஆகியோர்களுக்கும் கொடுங்காயம் ஏற்பட்டு உடனடியாக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 27.08.2018 முதல் 03.09.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்துள்ளனர். விபத்தினால் மனுதாரருக்கு இரண்டு கால் முட்டி, வலது கையில் கொடுங்காயம், வலது கையின் மோதிர விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. மனுதாரர் தற்போது வரை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பார்த்து வருகிறார். மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட TN-68-X-7502 என்ற எண் கொண்ட வாகன ஓட்டுனர் மீது நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் குற்ற எண். 294/2018-ல் இதச பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு காரணம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் கவனக்குறைவே ஆகும். மேலும் 1 ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், 2 ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை காப்புறுதி பெற்றவர் என்பதாலும் எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ ரூ.5,00,000/- வட்டியுடன் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள்.

4) <u>**எம்.சி.ஓ.பி. எண். 77/2019**</u>

மனுதாரருக்கு 27.08.2018 அன்று நடந்த விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.5,00,000/- வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 140, 141, 163, 166 உ/இ 3(1) ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) **<u>மனுவின் சுருக்கம்</u>**:

மனுதாரர் கடந்த 27.08.2018 அன்று மதியம் சுமார் 2.45 மணியளவில் அவரது தெருவை சேர்ந்த தினேஷ்குமார், கணேசன், தர்மசீலன் ஆகியோர் செப்டிக் டேங்க் மூடும் கருங்கல் ஸ்லாப்புகளை 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-X-7502 என்ற பதிவெண் கொண்ட Mahindra Supro Mini Truck ல் ஏற்றி கொண்டு நாச்சியார்கோவிலுக்கு செல்லும் போது மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் பாஸ்கர் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் வண்டி நிலை தடுமாறி ரோட்டின் இடதுபுறமாக சாய்ந்ததால் வண்டியின் பின்னால் அமர்ந்திருந்த மனுதாரருக்கும், தினேஷ்குமார், கணேசன், தர்மசீலன் ஆகியோர்களுக்கும் கொடுங்காயம் ஏற்பட்டு உடனடியாக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 27.08.2018 முதல் 31.08.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்துள்ளனர். விபத்தினால் மனுதாரருக்கு வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த கொடுங்காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் தற்போது வரை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பார்த்து வருகிறார். மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட TN-68-X-7502 என்ற எண் கொண்ட வாகன ஓட்டுனர் மீது நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் குற்ற எண். 294/2018-ல் இதச பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு காரணம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் கவனக்குறைவே ஆகும். மேலும் 1ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், 2ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை காப்புறுதி பெற்றவர் என்பதாலும் எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ

அல்லது தனித்தோ ரூ.5,00,000/- வட்டியுடன் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள்.

6) **<u>MCOP No. 164/2019 and 77/2019 ல் 2 ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதும், 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் நிரூபிக்கப்பட வேண்டிய அம்சமாகும். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மனுதாரர்களை பின்னால் அமர்த்தி கொண்டு மெதுவாகவும், ஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை அனுசரித்தும் சென்று கொண்டிருந்த போது திடீரென ஒருவர் சாலையை கடக்க சாலையின் குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் எவ்வகையிலும் காரணம் இல்லை. மேற்கண்ட விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனரால் ஏற்படவில்லை. மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் வேலையாட்களாக சென்றுள்ளார்கள். அவ்வாறு பணியாட்களாக செல்லும் பட்சத்தில் மனுதாரர்கள் 2 ம் எதிர்மனுதாரர் / காப்பீடு நிறுவனத்திடம் இழப்பீடு கோர இயலாது. மனுதாரர்கள் சில நாட்களே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மனுதாரர்கள் மருத்துவ செலவு செய்தார் என்பது உண்மையல்ல. அதனை மெய்ப்பிக்கக்கூடிய ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மற்றும் வட்டி விகிதம் அதிகமாகும். இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**7) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்**:

| | |
|---|---|
| 1) | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2) | மனுதாரர்களுக்கு விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரர் யார்? |
| 3) | மனுதாரர்களுக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? |

**8) சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

எம்.சி.ஓ.பி எண். 164/2019 & 77/2019 ஆகிய மனுக்களில் காயமுற்றவர்களுக்காக ஒரே குற்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதால் இரு வழக்குகளையும் கூட்டாக விசாரிக்க அனுமதி கோரி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு உள்ளது. எம்.சி.ஓ.பி. எண்.164/2019 மனுவில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் தரப்பில் எம்.சி.ஓ.பி.எண்.164/2019 ன் மனுதாரர் கணேசன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எம்.சி.ஓ.பி. எண்.77/2019 ன் மனுதாரர் தர்மேந்திரன் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ம.த.சா.ஆ.7 முதல் ம.த.சா.ஆ.13 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 170-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

9) **<u>பிரச்சனை எண்.1-ற்கான தீர்வு</u>**:

(i) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த 27.08.2018 அன்று மதியம் சுமார் 2.45 மணியளவில் மனுதாரர்கள் அவர்களது தெருவை சேர்ந்த தினேஷ்குமார், தர்மசீலன் ஆகியோர்களுடன் செப்டிக் டேங்க் மூடும் கருங்கல் ஸ்லாப்புகளை 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-X-7502 என்ற பதிவெண் கொண்ட Mahindra Supro Mini Truck ல் ஏற்றி கொண்டு நாச்சியார் கோவிலுக்கு செல்லும் போது மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் பாஸ்கர் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் வண்டி நிலை தடுமாறி ரோட்டின் இடதுபுறமாக சாய்ந்ததால் வண்டியின் பின்னால் அமர்ந்திருந்த மனுதாரர்களுக்கும், தினேஷ்குமார், தர்மசீலன் ஆகியோர்களுக்கும்கொடுங்காயம் ஏற்பட்டு என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்தினால் MCOP 164/2019 ன் மனுதாரருக்கு இரண்டு கால் முட்டி, வலது கையில் கொடுங்காயம், வலது கையின் மோதிர விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 27.08.2018 முதல் 03.09.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்றும், MCOP 77/2019 ன் மனுதாரருக்கு வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த கொடுங்காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 27.08.2018 முதல் 03.09.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தற்போது வரை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பார்த்து வருகிறார் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனரின் அதிவேகமும், கவனக்குறைவும்

காரணம் என்றும் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மனுதாரர்களை பின்னால் அமர்த்தி கொண்டு மெதுவாகவும், ஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை அனுசரித்தும் சென்று கொண்டிருந்த போது திடீரென ஒருவர் சாலையை கடக்க சாலையின் குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் எவ்வகையிலும் காரணம் இல்லை என்றும், மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் வேலையாட்களாக சென்றுள்ளார்கள் என்றும், அவ்வாறு பணியாட்களாக செல்லும் பட்சத்தில் மனுதாரர்கள் 2ம் எதிர்மனுதாரர் / காப்பீடு நிறுவனத்திடம் இழப்பீடு கோர இயலாது என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(iii) மனுதாரர்கள் தரப்பில் மேற்கண்ட விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நிகழ்ந்துள்ளது என்பதை நிரூபிக்கும் வண்ணம் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகாரானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனரால் தான் விபத்து ஏற்பட்டது என மனுதாரர் புகாரிலும், மனுவிலும் குறிப்பிட்டுள்ளார். ம.சா.ஆ.1/முதல் தகவல் அறிக்கையில் 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்து குறித்து எ.ம.சா.1 விசாரணை

செய்யப்பட்டிருப்பினும் விபத்தை நேரடியாக பார்த்த சாட்சியை விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் முன்னிடப்படவில்லை. எனவே மேற்கண்ட விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் தான் காரணம் என பிரச்சனை 1ற்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காணப்படுகிறது.

10) <u>பிரச்சனை எண். 2</u>

(i) மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் யார் என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.5 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்து 27.08.2018 ல் நிகழ்ந்துள்ளது. காப்பீடு பாலிசி 14.08.2018 ல் இருந்து 13.08.2019 வரை நிலுவையில் இருந்துள்ளது. விபத்து சமயத்தில் பாலிசி நிலுவையில் உள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் பயணிகளாக பயணித்திருக்கும் பட்சத்தில் மேலும் வாகனத்தின் பின்புறம் அமர்ந்து சென்றிருக்கும் பட்சத்தில் காப்பீடு பாலிசி விதி மீறல் நிகழ்ந்துள்ளது என்றும், காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். தனது வாதத்திற்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Manager, IFFCO Tokio General Insurance Co. Ltd., Vs. Sathish kumar & Ors., CMA(MD) Nos. 46

and 163 of 2012 என்ற வழக்கில் பிறப்பித்த மேற்கோள் காட்டி வாதிட்டார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் பிறப்பித்த முன்தீர்ப்பு நெறி பின்வருமாறு,

10. "On the side of the appellant it is stated that under Article 142 of the Constitution, only the Hon'ble Supreme Court can pass such an order and even in that order, it is mentioned that only under special circumstances, the order was passed. Neither the Tribunal, nor the High Court has the power under Article 142 of the Constitution of India. A judgment of this Court in Asha Rani case rendered by Hon'ble Three Judges Bench, cannot be over ruled by a judgment of the Hon'ble Division Bench headed by two judges.

13. Under Article 142 of the Constitution of India, only the Hon'ble Supreme Court is having the power to pass an order of pay and recover and considering the judgment of the Full Bench of the Hon'ble Supreme Court, it is decided that there is no possibility of an order to pay and recover.

(iii) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முன்தீர்ப்பு வழங்கிய வழக்கில் கோருரிமையாளர்கள் ஆட்டோ வாகனத்தில் பயணம் செய்தவர்கள். இவ்வழக்கை பொறுத்தவரை கோருரிமையாளர் கூலி / Load Man என்ற அடிப்படையில் இழப்பீடு கோருகிறார். எனவே, மேற்கண்ட முன்தீர்ப்பு நெறி இவ்வழக்கிற்கு பொருந்தாது.

(iv) கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R. Nagarani Vs. Muthukrishnan in CMA (MD) Nos. 670 & 671 of 2019 என்ற வழக்கில் பிறப்பித்த முன்தீர்ப்பு நெறியினை மேற்கோள் காட்டி வாதிட்டார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் பிறப்பித்த முன்தீர்ப்பு நெறி பின்வருமாறு, 13.As per averment in the claim petitions, the deceased persons have

travelled on the top of the goods vehicle and not in the cabin. It is averred in the claim petitions that the deceased persons have travelled as load men for loading and unloading at the instance of the owner of the goods. However, at the time of deposition, the claimants have stated that the deceased persons were not load men by profession, but they were Carpenters. Therefore, the stand taken by the claimants in their claim petitions has been withdrawn at the time of deposition.

16.The learned counsel for the appellants had contended that even in cases of fundamental breach, the principal of pay and recovery could be resorted to. However, the learned counsel for the Insurance Company has pointed out the Division Bench Judgement of our High Court reported in 2018 (2) TN MAC 731 (DB) ( Bharati AXA General Insurance Co., Ltd., Vs. Aandi and others) wherein the Hon'ble Division Bench was pleased to hold that when there is no statutory requirement to cover the liability in respect of the passengers in a goods vehicle and therefore, the principles of pay and recovery as statutorily recognized in Sections 149(4) and 149(5) of the Motor Vehicles Act 1988 is not applicable ipso facto to such cases and therefore, the Court had refused to issue a direction to the Insurance Company to pay to the claimants and thereafter, recover the same from the owner. When the claimants have not established that the deceased persons were travelling in the goods vehicle either as a load men or as representatives of the owner of the goods, the only inference that could be drawn is that they CMA(MD).Nos.670 & 671 of 2019 have travelled as un-authorized passengers/gratuitous passengers in the goods vehicle. The Tribunal has rightly treated the deceased persons as gratuitous passengers

and exonerated the Insurance Company and fixed the liability upon the owner of the vehicle.

(v) மேற்கண்ட முன்தீர்ப்பு நெறிக்கு உட்பட்ட வழக்கில் கோருரிமையாளர் வாகனத்தின் மேல் கூரை பாகத்தில் அமர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கை பொறுத்தவரை வாகனத்தின் பின் பகுதியில் லோடு மேன் பாதுகாப்பிற்காக அமர்ந்திருந்ததாக குறிப்பிடப்பட்டு அதை ஒத்துரைத்து ம.சா.1, 2 சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட முன்தீர்ப்பு நெறி இவ்வழக்கிற்கு பொருந்தாது. எனினும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் பயணம் செய்தவர்கள் லோடுமேன் என்று நிரூபிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கும் பட்சத்தில் லோடு மேனாக பயணம் செய்திருந்தால் இழப்பீடு கோரலாம் என்று புலனாகிறது. வாகனத்தின் மேற்கூரையில் பயணம் செய்ததால் காப்பீடு பாலிசி விதி மீறல் நிகழ்ந்துள்ளது என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட முன்தீர்ப்பு நெறி இவ்வழக்கிற்கு பொருந்தாது.

(vi) இம்மனுவை பொருத்தவரை மனுதாரர்கள் லோடுமேன்களாக பயணித்தார்களா அல்லது பொருட்களின் உரிமையாளர்களா பயணித்தார்களா அல்லது அங்கீகரிக்கப்படாத பயணிகளாக அல்லது அனுமதிக்கப்படாத பயணிகளாக (Unauthorized passengers / Gratuitous passengers) பயணித்தார்களா என்று தீர்மானிக்கப்பட வேண்டும்.

(vii) மனுதாரர்கள் விபத்து தேதியன்று கடப்பாக்கல் பட்டறையில் இருந்து செப்டிக் டேங்க் மூடும் கருங்கல் ஸ்லாப்புகளை மனுதாரர்களின் தெருவை சார்ந்த தினேஷ்குமார், தர்மசீலன் ஆகியோர்களுடன் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தில் சென்றதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோருரிமை மனு எண். 77/20219 ன் மனுதாரர் தர்மேந்திரன் கொடுத்த புகாரிலான ம.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையில் தான் கூலி

வேலை செய்து வருவதாகவும் செப்டிக் மூடும் கருங்கல் ஸ்லாப்புகளை தினேஷ்குமார், கணேசன், தர்மசீலன் ஆகியோருடன் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தில் சென்றதாக குறிப்பிட்டுள்ளார். இதில் குறிப்பிட்டுள்ள கணேசன் என்பவர் கோருரிமை மனு எண். 164/2019 ன் மனுதாரர் ஆவார். கணேசன் ம.சா.1 தனது முதன்மை சாட்சியத்தில் " மேஸ்திரி கொத்தனாராக ஆட்கள் வைத்து வேலை செய்து நாள் ஒன்றுக்கு ரூ.1500/- வீதம் ரூ.45000/- வீதம் மாதம் சம்பாதித்து வந்ததாக " குறிப்பிட்டுள்ளார். விபத்து தேதியன்று கருங்கல் ஸ்லாப்புகளை 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தில் 3 நபர்களுடன் எடுத்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) ம.சா.2 தனது சாட்சியத்தில் கட்டிட சென்ட்ரிங் ஆட்கள் வைத்து வேலை செய்து நாள் ஒன்றுக்கு ரூ.1500/- வீதம் மாதம் ரூ.50000/- சம்பாதித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும், கடப்பாக்கல் பட்டறையில் இருந்து செப்டிக் டேங்க் மூடும் கருங்கல் ஸ்லாப்புகளை மற்ற மூன்று நபர்களுடன் சேர்ந்து கொண்டு வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். சரக்கு வாகனத்தில் நான்கு பேர் பயணித்தாகவும் அதில் ஒருவர் ஓட்டுநர் என்றும் ம.சா.2 குறுக்குவிசாரணையில் குறிப்பிட்டுள்ளார். ம.சா.1, 2 சாட்சியத்தில் இருந்து அவர்கள் கட்டிட தொழிலாளிகள் என்பதும் கட்டிட வேலைக்காக ஸ்லாப்புகளை ஏற்றி சென்றதும் நிரூபணம் ஆகிறது. அதனை மறுக்கும் விதத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் முன்னிடப்படவில்லை. மேற்கண்ட ஸ்லாப்புகளை இறக்கி வைத்து வேலை செய்வதற்காகவே மனுதாரர்கள் வாகனத்தில் சென்றதாக தெரியவருகிறது. எனவே, மனுதாரர்கள் கூலி மற்றும் லோடு மேன்கள் என்ற பதத்தின் கீழ் வருவார்கள்.

(ix) மேலும், மனுதாரர்கள் சரக்கு வாகனத்தில் லோடுமேன்கள் என்று அடிப்படையில் சென்றிருக்கும் பட்சத்தில் 6 நபர்கள் வரை சரக்கு வாகனத்தில்

பயணிக்கலாம் என்று பிரிவு 236 மோட்டார் வாகன சட்ட விதிகள் 1989 குறிப்பிடுவதாக கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மாண்புமிகு சென்னை உயர்நீதின்றம் Manjula & ors., Vs. M. Sakthivel & Anr., CMA (MD) NO. 972 of 2011 என்ற வழக்கினை கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்கோள் காட்டி வாதிட்டார். அதன் விபரம் பின்வருமாறு 26. The Tribunal has failed to consider Section 147(1) of the Motor Vehicles Act and Rule 236 of Tamil Nadu Motor Vehicles Rules and IMT. 37-A. As per the above provision, the owner of goods, even if he travels in the backside of the goods vehicle along with his goods, is entitled to claim compensation from the Insurance Company for the injuries and his legal heirs are entitled to claim compensation from the Insurance Company for the death.

(x) பிரிவு 236 மோட்டார் வாகன சட்ட விதி பின்வருமாறு, " Rule 236 of the Tamil Nadu Motor Vehicles Rules, states that no person shall be carried in the cabin of a goods carriage beyond the number for which there is a seating accommodation at the rate of thirty eight centimeters measured along the seat, excluding the space reserved for the driver, for each person, and not more than six persons in all in addition to the driver shall be carried in any goods carriage. Thirty eight Centimetres space may accommodate one passenger."

(xi) மாண்புமிகு சென்னை உயர்நீதின்றம் Ms. Royal Sundaram Alliance General Insurance Co. Ltd., Vs. Kaanikkaimery & Ors. in CMA No. 1858 of 2015 and M.P. No. 1 of 2015 என்ற வழக்கினை கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்கோள் காட்டி வாதிட்டார். அதன் விபரம் பின்வருமாறு 12. Therefore, this Court is of the view that having

collected additional premium for the persons commensurating to the seating capacity of the vehicle viz., three persons and the claimant having proved that the deceased was not a gratuitous passenger but loadman engaged in connection with the vehicle, the insurance company cannot deny or deprive the claim"

(xii) மேற்கண்ட முன்தீர்ப்பு நெறியின் அடிப்படையில் மனுதாரர்கள் லோடு மேன்கள் / கூலிகள் என்ற அடிப்படையில் சிமெண்ட் ஸ்லாப்புகளுடன் அவற்றை இறக்குவதற்காக பயணித்துள்ளதால் அவர்கள் அனுமதிக்கப்படாத / அங்கீகரிக்கப்படாத பயணிகள் என்ற பதத்தின் கீழ் வரமாட்டார்கள் என்று தீர்மானிக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட சிமெண்ட் ஸ்லாப்புகளுடன் சென்ற கூலிகளுக்கு இழப்பீடு கோரும் உரிமை உண்டு என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் இரண்டு முன்தீர்ப்புநெறிகளிலும் குறிப்பிட்டுள்ளது இம்மனுவிற்கு முற்றும் பொருந்தும். மேலும் மனுதாரர் தாக்கல் செய்த ம.சா.ஆ.4 ல் இருக்கை திறன் இரண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் பிரிமியம் தொகை ரூ.100/- டிரைவர் கிளீனர் என்ற அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, வாகனத்தில் மேலும் இரண்டு நபர்கள் பயணித்துள்ளதால் காப்பீடு விதி மீறல் நிகழ்ந்துள்ளது. எனவே, இழப்பீட்டு தொகையை காப்பீடு நிறுவனம் வழங்கிவிட்டு வாகன உரிமையாளரிடம் வசூலித்து கொள்ள வேண்டியது என்று தீர்மானிக்கப்படுகிறது.

(xiii) 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு மினி டிரக் வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் Non TR valid up to 26.03.2027 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வணிக நோக்கம் இல்லாத வாகனங்களுக்கான (LMV) ஓட்டுநர் உரிமம் என்பது

புறப்படுகிறது. மனுவில் சம்பந்தப்பட்ட வாகனமானது மினி டிரக் சரக்கு வாகனம் ஆகும். கற்றறிந்த மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஓட்டுநர் வணிக நோக்கம் அல்லாத வாகனங்களுக்கான ஓட்டுநர்உ ரிமம் பெற்றிருக்கும் பட்சத்தில் அந்த வாகனமானது 7500 கிலோவிற்கு மேல் இல்லாமல் இருந்தால் மேற்கண்ட ஓட்டுநர் உரிமம் சரக்கு வாகனங்களுக்கும் பொருந்தும் என்று வாதிட்டார். அதற்கு ஆதரவாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Sunita & ors., Vs. United India Insurance Co.Ltd., & Ors., 2026 (1) TNMAC 1 (SC) என்ற வழக்கில் பிறப்பித்த முன்தீர்ப்பு நெறியினை மேற்கோள் காட்டி வாதிட்டார். அதன் விபரம் பின்வருமாறு, " **10.** The findings of the Courts below reveal that the driver of the vehicle involved in the accident was holding a valid license to drive a Light Motor Vehicle (LMV). However, in fact, the vehicle in question is a commercial one. We agree with the view taken by the High Court, holding that no endorsement was required to drive a commercial vehicle of the type in question, by the driver who possesses a license to drive a Light Motor Vehicle (LMV). In the present case, the offending vehicle was TATA 407 Truck, having a gross total weight of around 4995 Kg., which does not exceed 7500 Kg. We must advert to the recent finding of this Court laid down by the Constitutional Bench in *Bajaj Alliance General Insurance Co. Ltd.* v. *Rambha Devi*[6], wherein view taken by the three-Judge Bench in *Mukund Dewangan* (Supra), was affirmed while observing that:

"**181.** Our conclusions following the above discussion are as under:

**181.1.** <u>A driver holding a licence for light motor vehicle (LMV) class, under Section 10(2)(d) for vehicles with a gross vehicle weight under 7500 kg, is permitted to operate a "transport vehicle" without needing additional authorisation under Section 10(2)(e) of the MV Act specifically for the "transport vehicle" class.</u> For licensing purposes, LMVs and transport

vehicles are not entirely separate classes. An overlap exists between the two. The special eligibility requirements will however continue to apply for, inter alia, e-carts, e-rickshaws, and vehicles carrying hazardous goods.

**181.2.** The second part of Section 3(1), which emphasises the necessity of a specific requirement to drive a "transport vehicle", does not supersede the definition of LMV provided in Section 2(21) of the MV Act.

**181.3.** The additional eligibility criteria specified in the MV Act and the MV Rules generally for driving "transport vehicles" would apply only to those intending to operate vehicles with gross vehicle weight exceeding 7500 kg i.e. "medium goods vehicle", "medium passenger vehicle", "heavy goods vehicle" and "heavy passenger vehicle".

**181.4.** The decision in *Mukund Dewangan (2017)* [*Mukund Dewangan* v. *Oriental Insurance Co. Ltd.*, (2017) 14 SCC 663] is upheld but for reasons as explained by us in this judgment. In the absence of any obtrusive omission, the decision is not per incuriam, even if certain provisions of the MV Act and the MV Rules were not considered in the said judgment."

(emphasis supplied)

Thus, in our considered view, in the present case, although the offending vehicle is a commercial one and the driver of the said vehicle at the time of accident possessed a license to only drive a Light Motor Vehicle (LMV) and, considering the gross weight of the vehicle in question is not in excess of 7500 Kg., the driver can be said to be holding a valid license to drive the same.

(xiv) இம்மனுவில் சம்பந்தப்பட்ட மகேந்திரா மினி டிரக் வாகனத்தின் எடையானது Cubic capacity / GVW - 1883 என்று குறிப்பிட்டு இருப்பதால் வாகனத்தின் எடையானது 7500 கிலோவிற்கு குறைவாக இருப்பதால் மனுவில் சம்பந்தப்பட்ட வாகனத்தை

ஓட்டுவதற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் பெற்றுள்ள ஓட்டுநர் உரிமம் போதுமானது என்று தீர்மானிக்கப்படுகிறது.

(xv) எனவே, 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை மனுதாரர்களுக்கு, வழங்கிவிட்டு, 1ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்துக் கொள்ள வேண்டியது என இத்தீர்ப்பாயம் பிரச்சனை எண்.2-ற்கு தீர்வு காணப்படுகிறது.

**11) MCOP 164/2019 ன் பிரச்சனை எண்.3-ற்கான தீர்வு**:

விபத்து சமயத்தில் மனுதாரர் கொத்தனார் வேலை பார்த்து வந்துள்ளார் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு பலத்த காயமும், இரண்டு கால் முட்டி, வலது கையில் காயம், வலது கையின் மோதிர விரலில் காயம் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 27.08.2018 முதல் 03.09.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்று ம.சா.ஆ.1 மற்றும் 3 கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் விடுவிப்பு சான்று மூலம் அறிய முடிகிறது. ம.சா.ஆ.1 காயச்சான்றின் மூலம் மனுதாரருக்கு சாதாரண காயம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மனுதாரர் 27.08.2018 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 03.09.2018 அன்று விடுவிப்பு செய்யப்பட்டுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்டது சாதாரண காயமாக இருப்பினும் காயத்தின் தன்மை மற்றும் உபாதை அதிகமாக இருப்பதாகவே ம.சா.ஆ.1 மூலமாக தெரியவருகிறது. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் வலி மற்றும் துன்பம், உதவியாளர் செலவு, ஊட்டச்சத்து செலவு, போக்குவரத்து செலவு, உடை சேதத்திற்கான செலவு ஆகியவற்றிற்கு இழப்பீடு அனுமதிக்கத்தக்கதாகும்.

12) **வலி மற்றும் துன்பம்**

விபத்தினால் மனுதாரருக்கு இரண்டு கால் முட்டி, வலது கையில் காயம், வலது கையின் மோதிர விரலில் காயம் ஏற்பட்டுள்ளது. எனவே, வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

13) **உதவியாளர் செலவு**

விபத்தினால் மனுதாரருக்கு இரண்டு கால் முட்டி, வலது கையில் காயம், வலது கையின் மோதிர விரலில் காயம் ஏற்பட்டு அதற்காக 8 நாட்கள் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் அவருக்கு உதவியாளர் தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே உதவியாளர் செலவுத் தொகையாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

14) **ஊட்டச்சத்து உணவு**

மனுதாரருக்கு விபத்தினால் இரண்டு கால் முட்டி, வலது கையில் காயம், வலது கையின் மோதிர விரலில் காயம் ஏற்பட்டுள்ளதால் அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

15) **வருமான இழப்பு**

விபத்தினால் ஏற்பட்ட இயலாமைகளாலும், இரண்டு கால் முட்டி, வலது கையில் காயம், வலது கையின் மோதிர விரலில் காயங்களினால் குறைந்தபட்சம் இரண்டு வாரங்கள் மனுதாரர் ஓய்வில் இருந்திருக்க வேண்டியிருக்கும். எனவே வருமான

இழப்பானது ஒரு நாளுக்கு ரூ.500 வீதம் 14 நாட்களுக்கு ரூ.7000/- (ரூபாய் ஏழாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

**16) போக்குவரத்து செலவு**

மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு முதலில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் மனுதாரருக்கு விபத்தினால் இரண்டு கால் முட்டி, வலது கையில் காயம், வலது கையின் மோதிர விரலில் காயம் ஏற்பட்டுள்ளதால் பல முறை மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) முங்கப்படுகிறது.

**17) உடைகள் இழப்பிற்கான செலவு**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| வ. எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | வலி மற்றும் துன்பத்திற்காக | 25,000/- |
| 2 | உதவியாளர் செலவிற்காக | 5,000/- |
| 3 | ஊட்டச்சத்து உணவிற்காக | 5,000/- |
| 4 | வருமான இழப்பிற்காக | 7,000/- |
| 5 | போக்குவரத்து செலவிற்காக | 5,000/- |
| 6 | உடைகள் இழப்பிற்காக | 3,000/- |
| | கூடுதல் | 50000/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3-ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) 2 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையை வழங்கிவிட்டு பின் 1 ஆம் எதிர்மனுதாரர் / உரிமையாளரிடமிருந்து வசூல் செய்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2 ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.179701000009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் ரூ.63/- ஐ 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390-A/2014/F1 dated 13.02.2014-ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 11.01.2019, 15.02.2019, 10.04.2019 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 12.04.2019 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.5,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.50,000/- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.50/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.113/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.63 /- |

**செலவுத்தொகை பட்டியல்**:

| தலைப்பு | மனுதாரர் | எதிர்மனுதாரர் |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ.113/- | - |
| வக்காலத்து | ரூ.10/- | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.5000/- | ரூ.5000/- |
| கூடுதல் | ரூ.5123/- | ரூ.5010/- |

18) **MCOP 77/2019 ன் பிரச்சனை எண்.3-ற்கான தீர்வு**:

விபத்து சமயத்தில் மனுதாரர் சென்ட்ரிங் வேலை பார்த்து வந்துள்ளார் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 27.08.2018 முதல் 31.08.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்று ம.சா.ஆ.7 மற்றும் 9 கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் விடுவிப்பு

சான்று மூலம் அறிய முடிகிறது. ம.சா.ஆ.7 காயச்சான்றின் மூலம் மனுதாரருக்கு சாதாரண காயம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மனுதாரர் 27.08.2018 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 31.08.2018 அன்று விடுவிப்பு செய்யப்பட்டுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்டது சாதாரண காயமாக இருப்பினும் காயத்தின் தன்மை மற்றும் உபாதை அதிகமாக இருப்பதாகவே ம.சா.ஆ.7 மூலமாக தெரியவருகிறது. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் வலி மற்றும் துன்பம், உதவியாளர் செலவு, ஊட்டச்சத்து செலவு, போக்குவரத்து செலவு, உடை சேதத்திற்கான செலவு ஆகியவற்றிற்கு இழப்பீடு அனுமதிக்கத்தக்கதாகும்.

19) **<u>வலி மற்றும் துன்பம்</u>**

விபத்தினால் மனுதாரருக்கு வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டுள்ளது. எனவே, வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

20) **<u>உதவியாளர் செலவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு அதற்காக 5 நாட்கள் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் அவருக்கு உதவியாளர் தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே உதவியாளர் செலவுத் தொகையாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**21) ஊட்டச்சத்து உணவு**

மனுதாரருக்கு விபத்தினால் வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**22) வருமான இழப்பு**

விபத்தினால் ஏற்பட்ட இயலாமைகளாலும், வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்களினால் குறைந்தபட்சம் 2 வாரங்கள் மனுதாரர் ஓய்வில் இருந்திருக்க வேண்டியிருக்கும். எனவே வருமான இழப்பானது ஒரு நாளுக்கு ரூ.500 வீதம் 14 நாட்களுக்கு ரூ.7000/- (ரூபாய் ஏழாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

**23) போக்குவரத்து செலவு**

மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு முதலில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் மனுதாரருக்கு விபத்தினால் வலது கால் பாதத்திற்கு மேல் விரல்கள் ஓரத்தில் கிழிந்த காயம், இடுப்பு மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டுள்ளதால் பல முறை மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) வழங்கப்படுகிறது.

**24) உடைகள் இழப்பிற்கான செலவு**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **இழப்பீடு தலைப்புகளில்** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| 1. | வலி மற்றும் துன்பத்திற்காக | 25,000/- |
| 2 | உதவியாளர் செலவிற்காக | 5,000/- |
| 3 | ஊட்டச்சத்து உணவிற்காக | 5,000/- |
| 4 | வருமான இழப்பிற்காக | 7,000/- |
| 5 | போக்குவரத்து செலவிற்காக | 5,000/- |
| 6 | உடைகள் இழப்பிற்காக | 3,000/- |
| | கூடுதல் | 50000/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3-ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) 2 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையை வழங்கிவிட்டு பின் 1 ஆம் எதிர்மனுதாரர் / உரிமையாளரிடமிருந்து வசூல் செய்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2 ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.17970100009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் ரூ.63/- ஐ 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390-A/2014/F1 dated 13.02.2014-ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 11.01.2019, 14.02.2019 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 19.02.2019 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.5,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.50,000/- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.50/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.113/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.63 /- |

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**:

| தலைப்பு | மனுதாரர் | 2 ம் எதிர்மனுதாரர் |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ.113/- | - |
| வக்காலத்து | ரூ.10/- | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.5000/- | ரூ.5000/- |
| கூடுதல் | ரூ.5123/- | ரூ.5010/- |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.28 14:41:32 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.

| | |
|---|---|
| **<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**: | |
| ம.சா.1 | கணேசன் |
| ம.சா.2 | தர்மேந்திரன் |
| **<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**: | |
| ம.த.சா.ஆ.1 | 27.08.2018 தேதியிட்ட விபத்துப் பதிவேடு உண்மை நகல் |
| ம.த.சா.ஆ.2 | 30.08.2018 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் |
| ம.த.சா.ஆ.3 | 03.09.2018 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் |
| ம.த.சா.ஆ.4 | 14.08.2018 தேதியிட்ட விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கான காப்பீடு நகல் |
| ம.த.சா.ஆ.5 | 03.09.2018 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல் |

| | |
|---|---|
| ம.த.சா.ஆ.6 | மனுதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் நகல் |
| ம.த.சா.ஆ.7 | 27.08.2018 தேதியிட்ட விபத்துப் பதிவேடு உண்மை நகல் |
| ம.த.சா.ஆ.8 | 30.08.2018 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.த.சா.ஆ.9 | 03.09.2018 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் |
| ம.த.சா.ஆ.10 | 14.08.2018 தேதியிட்ட விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கான காப்பீடு நகல் |
| ம.த.சா.ஆ.11 | 03.09.2018 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல் |
| ம.த.சா.ஆ.12 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.த.சா.ஆ.13 | மனுதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் நகல் |
| **2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**: | |
| எ.ம.சா.1 | பாலாஜி (உதவி மேலாளர், 2 ம் எதிர்மனுதாரர் அலுவலகம்) |
| **2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்**: | |
| எ.ம.சா.ஆ.1 | 1 வது எதிர்மனுதாரர் இயக்கிய வாகனத்தின் காப்பீடு உண்மை நகல் |

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.28 14:41:38 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.